**செ.வெ.எண்: 87 / ஜீன் / 2021** **நாள்:24.06.2021**

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் *நடப்புநிதியாண்டு* 2021-22-ல், ரூ.10,090.85கோடி வங்கிகள் கடன் வழங்க இலக்கு - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு.

----------

திருச்சி மாவட்டத்தின் முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் மாவட்ட அனைத்து வங்கிகள் ஒருங்கிணைப்பு குழு சார்பாக, திருச்சி மாவட்டத்திற்கான நடப்பு நிதியாண்டு 2021-22- திட்டஅறிக்கை இன்று 24-06-2021 மாவட்ட ஆட்சியரகத்தில் வெளியிடப்பட்டது.

*இத்திட்ட அறிக்கையில்* ரூ.10,090.85கோடி முன்னுரிமைக் கடன்கள் வழங்க, நிர்ணயிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., *அவர்கள்* தெரிவித்தார். திருச்சி மாவட்டத்தில் முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நபார்டு வங்கியுடன் இணைந்து, 2021-22 நிதி ஆண்டுக்கான திட்ட அறிக்கையை வடிவமைத்துள்ளது.

மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, இத்திட்ட அறிக்கையில் பல்வேறு துறைகளில் வங்கிகள் கடன் வழங்க, வழிவகைகள் கூறப்பட்டுள்ளன. கடன் திட்ட அறிக்கையில் விவசாயத்துறைக்கு ரூ.5,619.17கோடி, குறு சிறு நடுத்தர தொழில் துறைக்கு ரூ.1,686.52கோடி, வீட்டுக் கடன்கள் ரூ.1,335.09கோடி, கல்விக்கடன் ரூ.490.71கோடி, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சக்திதுறை ரூ.91.67கோடி, சமூக உள்கட்டமைப்பு துறை ரூ.170.14கோடி மற்றும் இதர முன்னுரிமை கடன்கள் ரூ.697.55கோடி, ஆக மொத்தம் ரூ.10,090.85 கோடி கடன் வழங்க இலக்கு வகுக்கப்பட்டுள்ளது. கடன் திட்ட அறிக்கையை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் வெளியிட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி திருச்சி மண்டல முதுநிலை மேலாளர் திரு.கே.*வேலாயுதம் மற்றும் உதவி பொது மேலாளர்* திருS.*கங்காதரன்* பெற்றுக்கொண்டனர்.

மாவட்ட ஆட்சித்தலைவா் அவர்கள் அனைத்து வங்கிகளிடமும், விவசாய தவணை கடன்கள், சுய உதவிக்குழு கடன்கள், மற்றும் குறு சிறு நடுத்தர தொழில் கடன்களுக்கு அதிக ஒதுக்கீடு செய்யுமாறும், அரசு நிதியுதவி சாா்ந்த கடன்களை, வங்கிகள் கால வரையரைக்குள் பயனாளிகளுக்கு வழங்குமாறும் கேட்டுக்கொண்டாா்.

இந்நிகழ்ச்சியில், திருச்சி மாவட்ட திட்ட இயக்குநர் திரு.*சங்கர்*, நபார்டு வங்கி *மாவட்ட மேம்பாட்டு மேலாளர்* மேலாளர் திரு.*மோகன்கார்த்திக்,* திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் திரு.*சிவராமன்*, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திருமதி.சாந்தி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.க.சத்தியநாராயணன் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநா்,**
**செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**